(ஒன்பதாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 1(15).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2022 நவம்பர் 21 திங்கட்கிழமை வெளியிடப்பட்டது

## 2022 நவம்பர் 29, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளைத் திருத்துதல்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் திருத்துதல் தொடர்பாக 2022 நவம்பர் 21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையியற் கட்டளைகள் பற்றிய குழுவின் அறிக்கையின் பின்வரும் விதப்புரைகள் ஏற்றுக்கொள்ளப்படுமாக:-

**தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 123 ஐ உடனடுத்து பின்வரும் புதிய நிலையியற் கட்டளையாகிய 124 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையினை உட்புகுத்துக:-**

**புதிய நிலையியற் கட்டளை 124,—**

**வழிவகைகள் பற்றிய குழு**

(1) நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை வலுப்படுத்துகையில் அரசாங்கத்திற்கு மேலதிக வருவாயைத் திரட்டுவதற்கும் அரசாங்கத்தின் செலவினங்களைக் கருத்தில் கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கும் நோக்கத்திற்காக தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அமைச்சரவை அமைச்சர்கள் அல்லாத பதினாறு உறுப்பினர்களைக் கொண்ட வழிவகைகள் பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) அரசாங்க வரிவிதிப்பு, இறுப்பு மற்றும் அரசாங்கத்தின் வருமானங்களை அதிகரிக்கும் வழிகள் தொடர்பான அனைத்து விடயங்களையும் பரிசீலனை செய்வதற்கும் அவசியம் ஏற்படும் போது தேவையானவிடத்து வரிவிதிப்பு மற்றும் இறுப்புகள் பற்றிய தற்போதுள்ள கொள்கைகளுக்கான மாற்றங்களை முன்மொழிவதற்கான தத்துவத்தையும் இக்குழு கொண்டிருத்தல் வேண்டும்.

(3) குழுவின் கடமைகளை நிறைவேற்றும் போது, குழு பின்வருவன பற்றி பரிசீலனையை மேற்கொண்டு விதப்புரைகளை வழங்குதல் வேண்டும்:—

(அ) பயனுறுதியான வருமானச் சேகரிப்புப் பொறிமுறைகள்;

(ஆ) உள்நாட்டு இறைவரிச் சட்டங்களுடன் தொடர்புடைய விடயங்கள் மற்றும் ஏனைய சட்டங்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள வருமான வழிகள்;

(இ) இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளில் ஏற்புடையதாகவுள்ள இறுப்பு, சுங்கச் சட்டங்கள், கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களை உள்ளடக்கிய சுங்கம் மற்றும் சுங்க நிர்வாகம் தொடர்பான விடயங்கள்;

(ஈ) அனைத்து வகையான வர்த்தக உடன்படிக்கைகள், பண்ட உடன்படிக்கைகள் மற்றும் அவற்றின் நடைமுறைப்படுத்தல் அதேபோன்று இவ்வுடன்படிக்கைகளின் சர்வதேச விதிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அம்சங்கள் தொடர்புடைய விடயங்கள்;

(உ) இறக்குமதிக் கைத்தொழிலின் தாக்கங்கள், இறக்குமதிக் கொள்கைகள், போட்டித் தன்மையான இறக்குமதிச் சந்தையை ஊக்குவிப்பதற்கான பொறிமுறைகள் மற்றும் தீங்கு விளைவிக்கும் மற்றும் நேர்மையற்ற இறக்குமதிகள் மற்றும் அத்தகைய இறக்குமதி நடைமுறைகளை உள்ளடக்கிய இறக்குமதிக் கைத்தொழிலுடன் தொடர்புடைய விடயங்கள்;

(ஊ) ஏற்றுமதிக் கொள்கைகள், ஏற்றுமதி ஊக்குவிப்புப் பொறிமுறைகள், சந்தை நுழைவு மற்றும் போட்டி, கைத்தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருட்களின் தொடர்ச்சியான விநியோகம், இருதரப்பு மற்றும் பல்தேசிய வர்த்தக உறவுகளை உள்ளடக்கிய வர்த்தகக் கைத்தொழிலுடன் தொடர்புடைய குறித்த விடயங்கள்;

(எ) அனைத்து அரசாங்க ஓய்வூதியங்கள், சுகாதாரப் பராமரிப்பு, நலன்புரி மற்றும் சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள், அவற்றின் கொடுப்பனவுகள் மற்றும் கொள்கைகள், சிறுவர்பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளிட்ட அரசாங்க சமூக சேவை நிகழ்ச்சித் திட்டங்கள், உடல் அல்லது உள குறைபாடுள்ள ஆட்களுக்கான நிகழ்ச்சித் திட்டங்கள், புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டங்களுடன் தொடர்பான விடயங்கள்;

(ஏ) அவசரகால நிவாரணங்களை வழங்குதல் மற்றும் தொடர்பான கொள்கைகள் சம்பந்தமான விடயங்கள்.

(4) தற்போதுள்ள சட்டங்களுக்கு வரையறுக்கப்பட்டு குழுவின் நோக்கெல்லைகுள் அடங்கும் அனைத்து விடயங்கள் மீதும் குழு பொதுவான மேற்பார்வை தொடர்பில் தத்துவமுடையதாக இருத்தல் வேண்டும்:

ஆயினும், குழுவின் நோக்கெல்லைகுள் வரும் விடயங்கள் பற்றிய தற்போதுள்ள சட்டங்களில் திருத்தங்களை அறிமுகம் செய்வதற்கு அல்லது நீக்குவதற்கு புதிய சட்டவாக்கம் பற்றிய விதப்புரைகளை குழு மேற்கொள்ளலாம்.

(5) குழு தமது கண்டறிதல்கள் பற்றிய அறிக்கையை மூன்று மாதத்துக்கு ஒரு தடவை பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிப்பதுடன் ஏதாவது பரிகார நடவடிக்கை மற்றும் விதப்புரைகள் தேவைப்படும் விடயங்கள் ஏதேனும் இருப்பின் அவை பற்றிய அவதானிப்புகளையும் அவ்வறிக்கை உள்ளடக்குதல் வேண்டும்.

(6) வழிவகைகள் பற்றிய குழுவின் அறிக்கையொன்று சபையில் சபாபீடத்தில் இடப்பட்டதும் அவ் அறிக்கை நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் உரிய நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம் அவதானிப்புகளையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளையும் எட்டு வாரக் காலப்பகுதியினுள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்டுதல் வேணடும் என்பதுடன் குறித்த அவதானிப்புகள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் பற்றிய கூற்றொன்றை சமர்ப்பித்தல் அல்லது அச் சிபாரிசுகள் நிறைவுசெய்யப்படலாகாது என்பது அமைச்சரின் கருத்தானால் அதற்கான காரணத்தை அமைச்சர் எழுத்தில் விளக்குதல் வேண்டும் என்பதுடன் அமைச்சர் மேற்கொள்வதற்கு உத்தேசித்துள்ள மாற்று நடவடிக்கையையும் சுட்டிக்காட்டுதல் வேண்டும். குழுவுக்குத் தேவைப்படின் நிலைப்பாட்டை நேரில் வந்து விளக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சரை அழைப்பதுடன் அவ்வாறான விடயம் தொடர்பாக எழுகின்ற கேள்விகளுக்கு எட்டு வாரங்களினுள் பதிலளிக்குமாறும் கோரலாம்.

(7) குழு தேவைக்கேற்றவாறு, ஏனைய நிறுவனங்களைப் பரிசீலிப்பதற்கு அதன் உறுப்பினர்களைக் கொண்ட உப குழுக்களை நியமித்தல் வேண்டும். ஆயின், ஏனைய உறுப்பினர்கள் விரும்பினால் இவ்வாறான ஏதாவது குழுக் கூட்டங்களில் கலந்துகொள்ளலாம். அந்த உப குழு அவசியமானது எனக் கருதும் அவ்வாறான விடயங்கள் தொடர்பில் அவ்வாறான உப குழுக்கள் குழுவிற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(8) வழிவகைகள் பற்றிய குழுவிற்கும் அல்லது குழுவினால் நியமிக்கப்பட்ட எந்தவொரு உப குழுவிற்கும் தேவையானபோது பாராளுமன்றத்தில் அல்லது குழுவினால் தீர்மானிக்கப்படும் எந்தவொரு சம்பந்தப்பட்ட நிறுவனத்திலும் கூட்டத்தை நடாத்துவதற்கு சந்தர்ப்பமளிக்க முடியும்

(9) குழுவின் உறுப்பினர்களாகவிராத பாராளுமன்றத்தின் வேறு உறுப்பினர்கள் அத்தகைய குழுவின் நடவடிக்கைகளை அவதானிப்பதற்கு தவிசாளரின் அனுமதியுடன் அனுமதிக்கப்படலாம்

(10) வழிவகைகள் பற்றிய குழு அல்லது அதன் உப குழு எதுவும் அதன் கடமைகளைப் புரிவதற்காக எவரேனுமாளை அதன் முன்னர் அழைத்து வினவுவதற்கும் ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் கோருவதற்கும், பரிசீலிப்பதற்கும் களஞ்சியங்கள், சொத்துக்கள் என்பனவற்றைப் பார்வையிடவும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

(11) வழிவகைகள் பற்றிய குழுவின் கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும். குழுவினால் ஏற்றுக்கொள்ளத்தக்க நியாயமான காரணமின்றி அக்குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களிற்கு வருகைதராதுள்ள எவரேனும் உறுப்பினர், அத்தகைய குழுவின் உறுப்பாண்மையை இழந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

**தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 118 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

**118**. (1) தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பத்து உறுப்பினர்களுக்கு மேற்படாதவர்களைக் கொண்ட ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) ஓர் உறுப்பினரின் நடத்தை மற்றும் நற்பண்பு பற்றிய விதிகளின் மீறுகை தொடர்பான விடயங்கள் அல்லது பாராளுமன்றத்தின் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளமை தொடர்பில், உறுப்பினர் ஒருவரால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாட்டின் முதல் தோற்றத்தில் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக சபாநாயகர் திருப்தியடைவாராயின் அத்தகைய ஒரு முறைப்பாட்டை விசாரணை செய்தல்; மற்றும்

(ஆ) ஒவ்வொரு விடயம் தொடர்பான நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு நடத்தை மற்றும் நற்பண்பு பற்றிய விதிகள் மீறப்பட்டுள்ளதா என்பதையும் அவ்வாறு மீறப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அம்மீறுகையின் தன்மை அத்தகைய மீறுகை ஏற்படக் காரணமாயிருந்த சூழ்நிலைகள் என்பவற்றைத் தீர்மானிப்பதுடன் குழு பொருத்தமெனக் கருதக்கூடிய விதப்புரைகளைச் செய்தல்.

(3) குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுகின்ற அவ்வாறான ஒரு முறைப்பாடு குழுவிற்குக் கிடைத்த திகதியிலிருந்து இரண்டு வார காலத்தினுள், குழுவின் விதப்புரைகளை சபாநாயகருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். ஆயினும், தனிச்சிறப்பான விடயங்களின் பேரில் சபாநாயகர் அக் காலப்பகுதியை நீடிக்குமாறான கோரிக்கைக்கு அனுமதியளிக்கும் தத்துவம் உடையவராதல் வேண்டும். குழுவிற்கு அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்ட கருமங்களை விசாரணை செய்வதற்கு அவசியமானவாறான ஆட்களை அழைத்து விசாரிக்கவும் ஆவணங்களையும் வேறு பதிவேடுகளையும் வரவழைப்பதற்கும் தேவையான வேறு செயல்களைச் செய்வதற்கும் தத்துவங்கொண்டிருத்தல் வேண்டும்.

(4) குழுவானது, பாராளுமன்ற உறுப்பினர்களின் நடத்தைக்கோவை விதிகளின் மீறுகை அல்லது கடைப்பிடிக்காமை தொடர்பாக அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்தையும் விசாரணை செய்தல் வேண்டும். எல்லா உறுப்பினர்களும் சபையின் அல்லது சபையின் அதிகாரத்தின்கீழான அத்தகைய ஏதேனும் விசாரணையின் எல்லாக் கட்டங்களிலும் ஒத்துழைத்தல் வேண்டும். நடத்தைக்கோவை விதிகளின் சார்த்தப்பட்ட மீறுகை ஒன்றைப் பரிசீலிக்கின்ற கட்டத்தில் உறுப்பினரெவரும் அப்பரிசீலனை தொடர்பாகச் செல்வாக்குச் செலுத்துகின்ற நோக்கத்தில் வேண்டுமென்றோ அல்லது திட்டமிட்டவகையிலோ ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவின் உறுப்பினரொருவரின் ஆதரவை நாடுதலாகாது.

(5) குழுவானது அதன் பணிகளைச் செயற்படுத்துவதற்காக நிபுணர்களின் சேவைகளைப் பெறலாமென்பதுடன் ஆவணங்களை வரவழைத்தும் மற்றும் சாட்சிகளை அழைத்தும் விசாரணை செய்யலாம்.

(6) பாராளுமன்றம், ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவின் அறிக்கையில் செய்யப்பட்ட முடிவுகளையும் விதப்புரைகளையும் கவனத்திற்கொண்டு, அவசியமென அது கருதுகின்ற சந்தர்ப்பத்தில் உரிய உறுப்பினர் மீது தண்டனை ஒன்றை விதிக்கலாம்.

(7) குழுவானது, காலத்திற்குக்காலம் அதன் நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்துவதற்கான விதிகளை ஆக்கலாம்.

(8) குழுவின் தவிசாளர், பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒழுக்கவியல்சார் மற்றும் வேறு துர்நடத்தை தொடர்பான விடயங்களை விசாரணை செய்வதுடன் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலுமான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்துவதற்காக அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய பணிப்புரைகளை வழங்கலாம்.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.